**கவனிக்க.-** *2016.09.30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1988 - 2016 ඔක්තෝබර් මස 07 වැනි සිකුරාදා - 2016.10.07**

*1988 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1898 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1900 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |

**கவனிக்க.**- சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

## ஹக்மன பிரதேச சபை

ஹக்மன பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள கீழே குறிப்பிடப்படும் பதவிக்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு இவ்வறிவித்தலின்படி தகுதி வாய்ந்த 18 வயதுக்கு மேட்பட்ட 45 வயதுக்கு குறைந்த மற்றும் ஹக்மன பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தில் நிரந்தர வதிவாளராகிய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள முறை | கல்வித் தகைமையும் திறமைகளும் |
|---|---|---|---|---|
| 01 | நூலக உதவியாளர் | 01 | 03/2016 iv பொது நிர்வாக உ. அ. அமைச்சின் சுற்றறிக்கையின்படி பீ. எல். 1/2016 | கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 02 | வேலை /வெளிக்கள ஊழியர் | 02 | 03/2016 iv பொது நிர்வாக உ. அ. அமைச்சின் சுற்றறிக்கையின்படி பீ. எல். 1/2016<br><br>ரூபா 24,250- 10X250- 10X270- 10X300- 12X330- ரூபா 36,410 (மேற் குறித்த சம்பளத் திட்டம் செயற்படுத் தப்படுவது 2020.01.01 ஆம் திகதியி லிருந்து) | குறைந்தது 8 ஆம்/9 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள்.-**

01. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்து உடையதுமாகும்.
02. விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உரித்துடையவர் ஆவர்.
03. தெரிவு செய்யப்பட்ட ஊழியர்கள் 03 வருட பயிற்சி காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.
04. இந்த ஆட்சேர்ப்பு அரச கொள்கைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் சுற்று நிருபங்களுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிருவாகக் கோவையின் சுற்று நிருபங்களுக்கும் நிதிக் கட்டளைகளுக்கும் தென் மாகாண சபையின் அரச சேவை கொமிசன் சபையின் மற்றும் தென் மாகாண சபையினால் அரச திணைக்களங்களினால், ஹக்மன பிரதேச சபையினால் அடிக்கடி விதிக்கப்படும் வேறு கட்டளைகளுக்கும் மற்றும் கொள்கைகளுக்கும் சுற்று நிருபங்களுக்கும் அமைந்து நடத்தல் வேண்டும்.
05. ஆட்சேர்ப்பின் பின் 03 வருடகாலத்தின் பின்னரே சேவை நிரந்தரப்படுத்தல் தொடர்பாக கவனத்திற்கு எடுக்கப்படும்.

**விண்ணப்பிக்கவேண்டிய முறை** - இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்க 12" X 8" அங்குல அளவிலான கடதாசியில் விண்ணப்பப்படிவத்தினை தயார் செய்து 2016.10.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக "தலைவர், ஹக்மன பிரதேச சபை, ஹக்மன" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கையினால் கொண்டு வந்து ஒப்படைக்கவும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியை குறிப்பிடப்படல் வேண்டும். உரிய திகதிக்குப் பின் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள், பூர்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் இரத்துச் செய்யப்படும். தற்போது அரச சேவையில் மாகாண அரச சேவையில் சேவை புரியும் உத்தியோகத்தர்கள் தங்களின் விண்ணப்பப் படிவங்களை நிருவாகத் தலைவரூடாக அனுப்பிவைக்க வேண்டும்.

**விண்ணப்பப்பத்திரங்களுடன் கீழே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.**

01. பிறப்புச் சான்றிதழ்
02. கல்விச் சான்றிதழ்
03. அடையாள அட்டையின் பிரதி
04. வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடன்)
05. 03 வருட காலத்திற்கு மேற்பட்ட சேவைத் திறமை சான்றிதழ்.
06. சமீப காலத்தில் பெற்றுக் கொண்ட நற்சான்றிதழ்.

**ஆட்சேர்க்கும் முறை.-**

01. உரிய தகுதிகளையுடைய அனைத்து விண்ணப்பதாரிகளிலிருந்து கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தொழிற்திறனை உறுதி செய்யும் பரீட்சையின் பெறுபேறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும் (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

02. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தல் அல்லது அறிவித்தலை இரத்துச் செய்தல் போன்ற அனைத்து அதிகாரங்களும் ஹக்மன பிரதேச சபையின் தலைவருக்கே உரியது.

என். எம். பீ. ஜீ. அபேவிக்ரம,
செயலாளர்,
ஹக்மன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹக்மன,
2016, செத்தெம்பர் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹக்மன பிரதேச சபை**

............ பதவிகளுக்கான விண்ணப்பம்

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :-
02. முதலெழுத்துக்களை குறிப்பிடும் பெயர்கள் :-
03. சொந்த முகவரி :-
04. (அ) பிறந்த திகதி :- வருடம் :----, மாதம் :----, திகதி :----,
(ஆ) .............. ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----,
05. இலங்கை பிரசையா ? அவ்வாறாயின் பிரசா உரிமை மூலமா ? பதிவின் மூலமா ?
06. பால் : - ஆண்/பெண்
07. திருமணமானவரா? /திருமணமாகாதவரா ?
08. சித்தியடைந்த உயர் பரீட்சை :-
09. வேலைத் திறன் :-
10. தொழில் பயிற்சி :-
11. நீதி மன்றம் மூலம் தண்டணைக்குட்பட்டுள்ளீரா ?
12. அவ்வாறாயின் தண்டணையின் தன்மை.
13. தற்போது பிரதேச சபையில் சேவை புரிவதாயின் அது தொடர்பான விபரம்.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும், அதில் எதுவும் பிழை இல்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக என்னால் தரப்பட்ட தகவல்கள் பிழையானது எனத் தெரியவந்தால் நான் தகுதியற்றவர் எனக் கருதி வேலையிலிருந்து நீக்கப்படுவதோடு, எந்தவித தண்டப்பணமும் செலுத்தாது எனது நியமனம் இரத்துச் செய்யப்படும் என்றும் நான் அறிந்து கையொப்பமிடுகின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

**தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பாக நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ........................................................................................ இந் நிறுவனத்தில் ........................................................................................ சேவை புரிகிறார். இப்பதவி தொடர்பாக தேர்ந்தெடுக்கப் படுவாராயின் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும், அவர் எந்தவித தண்டனைக்கும் உட்படவில்லையெனவும் சான்றுபடுத்துவதோடு விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்து முன்வைக்கின்றேன்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----,
பதவி முத்திரை

.................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

10-130

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## வடமராட்சி தெற்கு/மேற்கு பிரதேச சபை - கரவெட்டி

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தம்*

இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் அவரின் பெயருக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2017 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் காணி சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும், சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்படிருக்கும் வளவிற்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்து மூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ் அறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**அட்டவணை**

| விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும். | களரியின் தலைவரா அல்லது செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருந்த இடம் |
|---|---|---|---|
| ஐயாத்துரை விக்னேஸ்வரன் யோகா இல்லம், கரணவாய் வடக்கு, கரவெட்டி. | முகாமையாளர் | ஐங்கரன் பொழுது போக்குக் கழகம். | பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. |

அ. வினோராஜ்
செயலாளர்.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
2016, செத்தெம்பர் 15.

10-03

---

## தொம்பே பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் நிறைவேற்று இடையாப்புச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்.*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் இல 9.3 பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன நிறைவேற்று இடையாப்புச் சட்டத்தின் 3 வது பிரிவின் கீழ் குறிப்பிட்டள்ள ஏற்பாடுகள் படி 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி இல. 216 கீழ், கீழே குறிப்பிட்டுள்ள தீர்மானத்தை எடுத்ததாக இத்தால் அறியத்தருகின்றேன்.

**தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (சார்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (நிறைவேற்று இடையாப்பு) சட்டத்தின் 2 வது பிரிவின் கீழ், மேல் மாகாணசபை நிர்வாக விடயப் பொறுப்பு அமைச்சரால் தயாரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1888/47 மற்றும்

2014.11.14 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்டமூல இடையாப்புக்கள், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை சார்பு ஏற்பாடுகள் சட்டத்தின் 2 வது பிரிவில் மேலும் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் படி மேல் மாகாணத்தின் மாகாண சபையால் பரிந்துரைக்கப்பட்டதும் அதுதொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல.1947/6 மற்றும் 2015.12.28 ஆந் திகதியிடப்பட்ட வர்த்தமானியின் கீழ் அறிவிக்கப்பட்டது.

1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்கள் (நிறைவேற்று இடையாப்பு) சட்டத்தின் 3 வது பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் படி அந்த நிறைவேற்று இடையாப்பை தொம்பே பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்காக 2017.01.01 ஆந் திகதி முதல் ஏற்புடையதாகுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவின் கீழ் தீர்மானிக்கிறேன்.

மேலும் இத்தீர்மானம் எடுக்கப்படும் இன்றைய திகதியாகும் போது தொம்பே பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்கா 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன நிறைவேற்று இடையாப்பு சட்டத்தின் 3 வது பிரிவின் கீழ் ஏற்புடையதாக்கி, நடைமுறைப்படுத்தப்படும் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட பெயர்களின் கீழ் விபரிக்கப்பட்ட நிறைவேற்று இடையாப்புக்களை அந்த நிறைவேற்று இடையாப்பின் கீழ் அதுவரைக்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு பாதிக்கப்படாத வண்ணம் 2016.12.31 ஆந் திகதிக்கு பின்பு தொம்பே பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்கு ஏற்புடையமாட்டாதென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கபிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் பிரகாரம் தீர்மானிக்கிறேன்.

இல. 11 கொண்ட விடுதிகள் இடையாப்பு
இல. 14 கொண்ட உணவகங்கள் இடையாப்பு
இல. 15 கொண்ட சோற்றுக்கடை, உணவகங்கள் மற்றும் தேனீர் அல்லது கோப்பிக் கடைகள் இடையாப்பு
இல. 16 கொண்ட பேகரி இடையாப்பு
இல. 19 கொண்ட மீன் விற்பனை இடையாப்பு
இல. 20 கொண்ட இறைச்சிவிற்பனை இடையாப்பு
இல. 21 கொண்ட அருவருப்பான மற்றும் அபாயகரவியாபார இடையாப்பு
இல. 28 கொண்ட சுற்றுலா வியாபாரிகள் இடையாப்பு
இல. 39 கொண்ட விளம்பர அறிவித்தல்கள், கட்புலனாகும் சுற்றாடல் இடையாப்பு

எம். யூ. ஆர். மத்துமகே,
செயலாளர் மற்றும் அதிகாரங்கள்
பணிகள் காரியங்கள் அமுல்படுத்தும்
உத்தியோகத்தர்,
தொம்பே பிரதேச சபை.

தொம்பே பிரதேச சபை,
தலைமை அலுவலகம், கிரிந்திவல,
2016, ஓகத்து 18.

10-65

---

## ரிதிமாலியத்த பிரதேச சபை

1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 139 ஆம் பிரிவின் கீழ், பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்படி ரிதிமாலியத்த பிரதேச சபையினால் கீழ்கண்ட நியமங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

டி. ஜீ. சீலவதி.
செயலாளர்,
ரிதிமாலியத்த பிரதேச சபை.

ரிதிமாலியத்த பிரதேச சபை அலுவலகம்,
2016, ஓகத்து 31.

## தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 139 ஆம் பிரிவின் கீழ், ரிதிமாலியத்த பிரதேச சபையினால் கீழ்க்கண்ட நியமங்களின்படி அதற்குட்பட்ட பிரதேசங்களில் வரிப்பணம் அறவீடு செய்வதற்காக வீடு, கட்டிடங்கள், காணி

*அல்லது தளங்கள் தொடர்பாக வருடாந்த மதிப்பீடு செய்வதன் பொருட்டு அத்தோடு சோலை வரி போன்றவற்றிற்காக விவசாய இடங்களின் விசாலத்தின் பொருட்டு மதிப்பீடு செய்து அதன்கீழ் ஒவ்வொரு உரிமையாளர்களிடமிருந்து வரி அல்லது கூலி வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் அறவீடு செய்வதற்காக இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கும்படி அந்தச் சட்டத்தின் 9 ஆம் பந்தியின் கீழ் 3 ஆம் உபபிரிவின் கீழ் பிரதேச சபையின் செயலாளரான எனக்கு கொடுக்கப்பட்ட தத்துவங்களின்படி இத்தால் அறவிக்கின்றேன்.*

*10-93*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

**12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

**13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

**14. 2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2016**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 07.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.09.2016 |
| | | வெள்ளி | 14.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.09.2016 |
| | | வெள்ளி | 21.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.10.2016 |
| | | வெள்ளி | 28.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.10.2016 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 04.11.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.10.2016 |
| | | வெள்ளி | 11.11.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.10.2016 |
| | | வெள்ளி | 18.11.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.11.2016 |
| | | வெள்ளி | 25.11.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.11.2016 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 02.12.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.11.2016 |
| | | வெள்ளி | 09.12.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.11.2016 |
| | | வெள்ளி | 16.12.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.12.2016 |
| | | வெள்ளி | 23.12.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.12.2016 |
| | | வெள்ளி | 30.12.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.12.2016 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.